بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *19/09/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**தாயிஃபை நோக்கி படையெடுத்துச் சென்றதன் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாக்களில் தாயிஃப் போர் பற்றிய குறிப்பு கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகச் சென்ற ஒரு நபித்தோழருக்கு, தாயிஃப் வாசிகள் அவருக்கு எந்தத் தீங்கும் நேராது என்று உத்தரவாதம் அளித்திருந்தனர். ஆனால் அவர் கோட்டைக்கு அருகில் சென்றபோது அவர்கள் உடன்படிக்கையை மீறி அவரை ஷஹீதாக்கி விட்டனர்.

அவ்வாறிருந்தும்கூட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமாதான முயற்சியைக் கைவிடவில்லை. பேச்சுவார்த்தையைத் தொடர ஹஸ்ரத் ஹன்ஸலா (ரலி) அவர்களை அனுப்பினார்கள். தாயிஃப் மக்கள் அவர் மீதும் தாக்குதல் நடத்தியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹன்ஸலாவை மீட்டு வருபவர் யார் என்று கேட்டார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் சென்று தாக்குதல் நடத்தியவர்களிடமிருந்து அவரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தார்கள்.

தாயிஃப் மக்களுக்கும் குறைஷிகளுக்கும் இடையே நீண்டகால, நல்ல உறவுகள் இருந்ததால் சமாதானத்திற்காக ஹஸ்ரத் அபூசுஃப்யான் பின் ஹர்ப் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் முகீரா பின் ஷுஅபா (ரலி) அவர்களும் கோட்டைக்குள் சென்றனர். ஆனால் அவர்களுக்கும் வெற்றி கிடைக்கவில்லை. இருப்பினும், முஹம்மது (ஸல்) அவர்களிடம் எங்கள் தோட்டங்களுக்குச் சேதம் விளைவிக்க வேண்டாம்; அல்லாஹ்வின் பொருட்டும், உறவு முறையின் பொருட்டும் அவற்றை அப்படியே விட்டுவிடும்படி கூறுங்கள் என்று கோட்டைவாசிகள் அவ்விருவரிடம் கோரிக்கை வைத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களின் கோரிக்கையை ஏற்று தோட்டங்களை அழிக்கும் உத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். இது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் காணப்படும் எப்படிப்பட்ட ஒரு மகத்தான உதாரணம் என்றால், போரின் போக்கையே மாற்றக்கூடிய ஓர் உத்தரவை, அம்மக்கள் அல்லாஹ்வின் பெயர் கூறி கேட்டுக் கொண்டதால் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள்.

எந்த அடிமைகள் எல்லாம் கோட்டைச் சுவரிலிருந்து இறங்கி நம்மிடம் வருவார்களோ அவர்கள் எல்லாம் சுதந்திரமானவர்களாகி விடுவார்கள் என்று அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். இதன் பேரில் 23 அடிமைகள் கோட்டைச் சுவரிலிருந்து இறங்கி அன்னாரிடம் வந்தனர். இதனால் கோட்டைவாசிகள் மிகவும் வருந்தினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அடிமைகள் அனைவரையும் விடுதலை செய்து ஒவ்வொருவரையும் ஒரு முஸ்லிமின் பொறுப்பில் ஒப்படைத்தார்கள். அந்த அடிமைகளின் பராமரிப்புப் பொறுப்பை அந்த முஸ்லிம்களிடம் கொடுத்தார்கள். அவர்களுக்கு நன்றாக மார்க்கத்தைக் கற்றுக் கொடுங்கள் என்றும் அறிவுறுத்தினார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில், உயைனா பின் ஹிஸ்ன் ஃபஸாரி என்பவர் கோட்டைக்குள் சென்று பனூ ஸகீஃப் குலத்தினருக்கு இஸ்லாத்தின் அழைப்பைக் கொடுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார் (உயைனா பின் ஹிஸ்ன் மக்கா வெற்றிக்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்றிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை, اَلْأَحْمَقُ الْمُطَاعُ அதாவது, 'முட்டாள் தலைவர்' என்று குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது). அனுமதி கிடைத்ததும், உயைனா கோட்டைக்குள் சென்று இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுப்பதற்குப் பதிலாக பனூ ஸகீஃப் குலத்தினரை இஸ்லாத்திற்கு எதிராக மேலும் தூண்டிவிட்டு அன்னாரிடம் திரும்பி வந்து முற்றிலும் பொய்யுரைத்தார். அவர் அங்கு என்ன சொல்லிவிட்டு வந்தார் என்பதை அல்லாஹ் வஹீ மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது பொய்யை வெளிப்படுத்தியவாறு உயைனா அங்கு பேசிய அனைத்து வார்த்தைகளையும் திரும்பக் கூறினார்கள். இதைக் கேட்டதும் உயைனா திகைப்படைந்தார்.

முற்றுகையின் நிலைமையைக் கருத்தில் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் நவ்ஃபல் பின் முஆவியா (ரலி) அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். இது, ஒரு நரி தன் குகையில் பதுங்கியிருப்பது போன்றது. நீங்கள் அதைப் பிடிக்க வேண்டும் என்று நிலையாக நின்றால் அதைப் பிடித்து விடலாம். அதை விட்டுவிட்டால் அது தீங்கு செய்ய சக்தி அற்றது என்று அவர் கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்தார்கள்.

வெறும் ஆலோசனையின் பேரில் இந்த முடிவு எடுக்கப்படவில்லை. மாறாக, அல்லாஹ்விடமிருந்தும் ஒரு குறிப்பிட்ட வழிகாட்டல் அல்லது சமிக்ஞை கிடைத்ததாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிகிறது. இல்லையெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்த் திட்டங்களில், இவ்வளவு முக்கியமான ஒரு போர் நடவடிக்கையை வெளிப்படையாக பாதியில் விட்டுவிட்டுத் திரும்பியது இதுவே முதல் முறையாகும். இது தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு கனவைப் பற்றிய குறிப்பும் வருகிறது; அதை அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஒரு பாத்திரத்தில் எனக்கு வெண்ணெய் பரிசாக வந்ததை நான் கண்டேன். பின்னர் ஒரு சேவல் அதைக் கொத்தி அந்தப் பாத்திரத்தைக் கீழே தள்ளிவிட்டது என்று கூறினார்கள். இந்த முறை நீங்கள் ஸகீஃப் குலத்தினரிடமிருந்து விரும்புவதை அடைய முடியாது என்பதே என் கருத்து என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதிலளித்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அதை ஆமோதித்தார்கள்.

முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவருவதாக அறிவித்தபோது சில துடிப்பான இளைஞர்கள், நாம் வெற்றி பெறாமல் எப்படித் திரும்புகிறோம் என்று எதிர்வினையை வெளிப்படுத்தினார்கள். முதலில் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமும் சென்று, வெற்றி கிடைக்கும் வரை முற்றுகையைத் தொடர வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கோரிக்கை வைக்குமாறு கேட்டனர். ஆனால் அவர்கள் இருவரும் மறுத்தபோது அந்த இளைஞர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக, அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் போரிடுவோம் என்றனர். சரி! நாளை காலை போரிடுங்கள் என்று அன்னார் கூறினார்கள். அடுத்த நாள் காலையில் அவர்களுக்கு காயங்களைத் தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை. அதன் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாளை காலை நாம் திரும்புவோம் என்றார்கள். இதைக் கேட்ட அந்த இளைஞர்களும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவர்களின் கருத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் புன்னகைத்தார்கள்.

இந்தப் போரில் காஃபிர்களில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஆனால், அவர்களின் காயமடைந்தவர்கள் பற்றியும், மற்ற கொல்லப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கை பற்றியும் குறிப்பு இல்லை. ஏனெனில், அவர்கள் கோட்டைக்குள் இருந்தனர். அதேபோல், முஸ்லிம்களில் காயமடைந்தவர்களின் சரியான எண்ணிக்கையும் தெரியவில்லை. ஆனால் ஹஸ்ரத்

அபூசுஃப்யான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரலி) ஆகியோர் காயமடைந்தது பற்றிய குறிப்பு கிடைக்கிறது. இந்தப் போரில் 12 நபித்தோழர்கள் ஷஹீத் ஆனார்கள். அவர்களின் பெயர்கள்; ஹஸ்ரத் சயீத் பின் ஆஸ் (ரலி), ஹஸ்ரத் அர்ஃபதா பின் ஜனாப் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ உமையா (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரலி), ஹஸ்ரத் ஸாயிப் பின் ஹாரிஸ் (ரலி) மற்றும் அவரது சகோதரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் (ரலி), ஹஸ்ரத் ஜலீஹா பின் அப்துல்லாஹ் (ரலி), ஹஸ்ரத் ஸாபித் பின் ஜலா (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸஹ்ல் (ரலி), ஹஸ்ரத் முன்ஸிர் பின் அப்துல்லாஹ் (ரலி), ஹஸ்ரத் ரகீம் பின் ஸாபித் (ரலி) மற்றும் பின்னர் மரணமடைந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரலி).

இந்தப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அவர்களின் இரு மனைவிகளான ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) ஆகியோர் இருந்தனர். இந்த இருவருக்கும் இரண்டு கூடாரங்கள் அமைக்கப்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இரு கூடாரங்களுக்கும் இடையில் தொழுது வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃபை எத்தனை நாட்கள் முற்றுகையிட்டார்கள் என்பது பற்றி பல அறிவிப்புகள் உள்ளன. 10 முதல் 40 இரவுகள் வரை முற்றுகையிட்டதாக அறிவிப்புகள் காணக் கிடைக்கின்றன. புறப்படும் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், “நாங்கள் திரும்புபவர்கள்; தவ்பா செய்பவர்கள்; இறைவணக்கம் புரிபவர்கள்; எங்கள் இறைவனைப் புகழ்பவர்கள்" என்று ஓதியவாறு திரும்புங்கள் என்றார்கள். அல்லாஹ்வின் தூதரே! பனூ ஸகீஃப் குலத்தினருக்கு எதிராகச் சாபமிடுங்கள் என்று அன்னாரிடம் கேட்கப்பட்டது. அன்னாருடைய பரந்த மனப்பான்மையின் நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், சாபமிடுவதற்குப் பதிலாக, "அல்லாஹ்வே! ஸகீஃப் குலத்தினருக்கு நேர்வழி காட்டுவாயாக. அவர்களை முஸ்லிம்களாகக் கொண்டு வருவாயாக" என்று அவர்களுக்காக துஆ செய்தார்கள். அதன் பிறகு, திரும்புவதற்காகப் புறப்பட்டபோது, "அல்லாஹ்வே! அவர்களுக்கு நேர்வழி காட்டுவாயாக. அவர்களிடமிருந்து (எங்களுக்கு) வந்தடையும் விஷயத்திற்கெதிராக நீயே எங்களுக்குப் போதுமானவனாக இருப்பாயாக" என்று துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான நோக்கம், வழிதவறிய படைப்புகள் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதேயாகும். அல்லாஹ் அன்னாரின் இந்த துஆவை எவ்வாறு ஏற்றுக்கொண்டான் என்றால், ஒரு வருடம் முடிவதற்குள் அதாவது, ரமளான் 9 ஹிஜ்ரியில் இதே தாயிஃப் மக்கள் அனைவரும் முஸ்லிம்களாகிவிட்டனர்.

ஹுனைன் போரில் கிடைத்த செல்வங்கள் பங்கிடப்பட்டது பற்றியும் குறிப்பு காணப்படுகிறது. அன்னாருடைய வழிகாட்டலின் பேரில், 6000 அல்லது 8000 அடிமைகள் தங்குவதற்காக, அவர்களை குளிர் மற்றும் வெப்பத்தின் கடுமையிலிருந்து பாதுகாக்க தற்காலிகக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. போர்ச் செல்வத்தில் 24000 ஒட்டகங்கள், 40000 க்கும் மேற்பட்ட ஆடுகள், 4000 ஊக்கியா வெள்ளி அதாவது, ஏறக்குறைய 490 கிலோகிராம் வெள்ளி ஆகியவை கிடைத்தன. இதற்கு முன்பு முஸ்லிம்களுக்கு இவ்வளவு அதிகமான போர்ச் செல்வம் கிடைத்ததில்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில்கூட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவர்களுடைய தோழர்களின் தர்பிய்யத்தில் எந்த அளவு அக்கறை இருந்தது என்றால், போரில் கிடைத்த செல்வங்களைப் பிரிப்பதற்கு முன்பு, "இந்தச் செல்வத்தில் ஐந்தில் ஒரு பங்கு தவிர, என் உரிமையும் உங்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமை போன்றதே. அந்த ஐந்தில் ஒரு பங்கும்கூட இறுதியில் உங்களிடமே திரும்ப வரும்" என்று அறிவித்தார்கள். பிறகு, "ஊசி மற்றும் அதன் நூல் அல்லது அதைவிடச் சிறிய பொருள் யாரிடமாவது இருந்தால் அதைத் திருப்பித் தந்துவிடுங்கள்" என்று கூறினார்கள். "மோசடி செய்வதிலிருந்து தவிர்ந்திருங்கள்; ஏனெனில், கியாமத் நாளில் அது மோசடி செய்தவர்களுக்கு அவமானத்தையும், கறையையும் ஏற்படுத்தும்" என்று எச்சரித்தார்கள். இதைக் கேட்ட ஒரு நபித்தோழர், ஒட்டக முடியால் செய்யப்பட்ட ஒரு கயிற்று உருண்டையை அன்னாரிடம்

கொண்டு வந்து, கிழிந்த சேணத்தைத் தைப்பதற்காக நான் இந்த நூலை போரில் கிடைத்த செல்வத்திலிருந்து எடுத்திருந்தேன் என்றார். இதேபோல், மற்றொரு நபித்தோழர் போரில் கிடைத்த செல்வத்திலிருந்து ஓர் ஊசியை எடுத்துத் தன் மனைவிக்குக் கொடுத்திருந்தார். அறிவிப்பைக் கேட்டவுடன் உடனடியாக அதைத் திரும்பப் பெற்று போரில் கிடைத்த செல்வத்தில் வைத்துவிட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் கிடைத்த செல்வங்களைப் பங்கிடும்போது, இணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் முதலில் கோத்திரங்களின் தலைவர்களுக்கும், பெரிய மனிதர்களுக்கும் வழங்கினார்கள். இந்தத் தலைவர்கள் தங்கள் கோத்திரங்களில் கண்ணியமும் மரியாதையும் கொண்டவர்களாக இருந்தனர். அன்னார் அவர்களுக்கு நூறு ஒட்டகங்களையும், சிலருக்கு ஐம்பது ஒட்டகங்களையும் வழங்கினார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம் மற்றவர்களை அழைத்து வரச் சொன்னார்கள். பிறகு, அன்னார் அனைவருக்கும் போர்ச் செல்வத்தைப் பங்கிட்டார்கள். ஒவ்வொருவருக்கும் நான்கு ஒட்டகங்கள் அல்லது நாற்பது ஆடுகள் கிடைத்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறைஷிகளுக்கு போர்ச் செல்வம் கொடுத்ததற்கான ஒரு காரணத்தைக் குறிப்பிடுகையில், நான் குறைஷிகளுக்கு கொடுத்து அவர்களுக்கு ஆறுதல் அளிக்க விரும்புகிறேன். ஏனெனில், அவர்கள் குஃப்ரை விட்டு விலகி அதிக காலம் ஆகவில்லை என்றார்கள்.

அச்சந்தர்ப்பத்தில், சில நயவஞ்சகர்கள் போர்ச்செல்வப் பங்கீட்டின் மீது ஆட்சேபனையும் தெரிவித்தனர். அன்னார் செல்வப் பங்கீட்டில் நீதியுடன் செயல்படவில்லை என்றும், அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்படவில்லை என்றும் குற்றம் சாட்டினர், நவூதுபில்லாஹ்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக் கேட்டபோது அன்னாருடைய முகம் சிவந்துவிட்டது. அல்லாஹ்வும் அவனது தூதரும் நீதியுடன் செயல்படவில்லை என்றால் வேறு யார் நீதியுடனும் நேர்மையுடனும் செயல்படுவார்கள் என்று கேட்டார்கள். அதன் பிறகு, என் சகோதரர் மூஸா மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக; அவருக்கு இதை விடவும் அதிக தொல்லைகள் கொடுக்கப்பட்டன; (ஆனால்,) அவர் பொறுமையை கடைபிடித்தார் என்று அன்னார் கூறினார்கள்.

அதன் பிறகு ஒருவன் எழுந்து நின்று, செல்வம் பங்கிட்டு கொடுக்கப்பட்டதன் மீது அவனும் ஆட்சேபனை செய்தபோது, உமக்கு கேடு உண்டாகட்டும்! என்னிடமும் நீதி இல்லையென்றால், வேறு யாரிடம் இருக்கும் என்று அன்னார் கேட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் எழுந்து நின்று, அனுமதித்தால் இப்போது இவனது கழுத்தை வெட்டி விடுகிறோம் என்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை! ஒருவேளை இந்த மனிதன் தொழுகையாளியாக இருக்கலாம் என்றார்கள். இதற்குக் காலித் அவர்கள், ஒரு தொழுகையாளி தன் மனதில் இல்லாத ஒன்றைச் சொல்ல முடியுமா என்று கேட்டார்கள். காலிதே! மக்களின் உள்ளங்களை திறந்து பார்ப்பதற்கோ அல்லது நெஞ்சை பிளந்து பார்ப்பதற்கோ எனக்கு கட்டளையிடப்படவில்லை என்று அன்னார் கூறினார்கள்.

மற்ற விஷயங்கள் இனி வரக் கூடிய காலத்தில் எடுத்துக் கூறப்படும் இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهٗ وَمَنْ
يُّضْلِلْهُ فَلاَ هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)